# வாக்கியம் அமைத்தல்

அ சொற்கள்

1. அன்பு

பிறரிடம் அன்பு செலுத்த வேண்டும்.

2. அரண்மனை

அரண்மனை பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

3. அக்கறை

ஆசிரியர் அக்கறையுடன் மாணவர்களைக் கவனித்தார்.

4. அனைவரும்

அனைவரும் கல்வி கற்க வேண்டும்.

5. அல்லி

குளத்தில் அல்லி மலரும்.

6. அலுவலகம்

அலுவலகம் பத்து மணிக்கு தொடங்கும்.

Notebook Writer Notebook Writer Notebook Writer Notebook Writer

7. அம்பு

ராமன் அம்பு எய்தான்.

8. அடிமை

ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டை அடிமைப்படுத்தினர்.

9. அணிகலன்

கடவுளுக்கு பல அணிகலன்களை அணிந்தனர்.

10. அதிசயம்

உலகில் ஏழு அதிசயம் உள்ளது.

11. அதிகம்

சிரபுஞ்சியில் மழை அதிகம் பெய்யும்.

12. அரக்கன்

முருகக் கடவுள் அரக்கனைக் கொன்றார்.

Notebook Writer

13. அரசமரம்

கோவில்களில் அரசமரம் இருக்கும்.

14. அமைச்சர்

அரசன் அமைச்சரிடம் ஆலோசித்தார்.

15. அவன்

அவன் மிகவும் எளிமையானவன்.

16. அழிவு

நிலநடுக்கம் பேரழிவு தந்தது.

17. அழுகை

குழந்தை அழுகையை நிறுத்தியது.

18. அற்புதம்

பாபா பல அற்புதங்களைச் செய்தார்.

19. அறம்

அறம் செய்ய விரும்பு.

Notebook Writer Notebook Writer Notebook Writer

## 20. அர்த்தம்

**அர்த்தம் அறிந்து படிக்க வேண்டும்.**

Notebook Writer Notebook Writer Notebook Writer